THURKA STATIONERS
CHUNNAKAM

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
**ராசி சில்க்ஸ்**
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்
RASI
**ராசி சில்க்ஸ்**
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

ஏடு: 4 யாழ்ப்பாணம் விபவ ஸூ மார்கழி மீ 01 வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 6 ( 16 - 12 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily இதழ்: 19

# தேர்தலை ஒத்திவைக்க ஒஸி, பிரேமா எதிர்ப்பு

## எனினும் இறுதி முடிவு நாளை

யாழ்ப்பாணம், டிசம்பர். 16

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித்தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சிக்கு ஜனாதிபதி வேட்பாளர்களான திரு. ஆர். பிரேமதாசா, திரு. ஒஸி அபேகுணசேகரா ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும் தேர்தல் ஒத்திவைக்கப்படுமா என்பது பற்றிய இறுதி முடிவு நாளை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னரே அறிவிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சம்மதமின்றி தேர்தலை தாம் ஒத்திவைக்க முடியாது என தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா தெரிவித்திருப்பதும் தெரிந்ததே.

நேற்றுக் காலை யாழ். நகரில் தங்கியிருந்த ஸ்ரீலங்கா மக்கள் கட்சி வேட்பாளர் திரு. ஒஸி அபேகுணசேகரவிடம் தேர்தல் ஒத்திவைப்புப் பற்றிக் கேட்டபோது—

- இது ஆட்சியாளர்களின் தந்திரோபாயம்: இதற்கு நாம் இணங்க மாட்டோம் எங்கள் சம்மதமின்றி அவர்கள் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என்றார்.

இதேசமயம் தேர்தல் ஒத்திவைப்பு முயற்சியை தாம் எதிர்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் திரு. ஆர். பிரேமதாஸவும் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:—

திருமதி பண்டார

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



ஒத்திவைப்புக்கு ஒத்திகை ஆரம்பிச்சிட்டுது எண்டு சொல்லுங்கோ..!

## பல்கலைக்கழக மாணவருக்கு மகாபொல கொடுப்பனவு

### திங்கள் முதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், டிச 16

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகமாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் எதிர் வரும் திங்கட்கிழமையில் இருந்து வழங்கப்படும்.

யாழ். பல்கலைக் கழக வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்துள்ளன.

இதற்கான காசோலைகள் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

மகாபொலப் பணம் இடைக்காலமையைக் காரணம் காட்டி யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் கடந்த வாரம் மறியல் ஒன்றை நடத்தியமை தெரிந்ததே. (ஓ-5)

### தேர்தல் கடமையை முன்னிட்டு

## யாழ். செயலக நடவடிக்கை அனைத்தும் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், டிச, 16

ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காக யாழ். செயலகத்தின் ஏனைய நடவடிக்கைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒழுங்குகள் யாழ். செயலகத்தில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன (ஓ-5)

## கண்காணிப்புக் குழுவின் அறிக்கை டிச.21 இல்

### இருவாரங்கள் கழித்து இறுதி அறிக்கை

கொழும்பு, டிச, 16

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக்குழு தேர்தல் முடிந்த பின்னர் டிசம்பர் 21 இல் தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

இரண்டு வாரங்கள் கழித்தே இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

இப்படி வெளியுறவு அமைச்சு தெரிவித்தது. குழுவில் சார்க் நாடுகளின் பிரதிநிதிகள் இடம் பெறுவது தெரிந்ததே. (உ-எ)

### ✈சர்வசன வாக்கெடுப்பின்றியே

## வடக்கும் கிழக்கும் சேர்த்து தமிழ் மாநிலமாக்கப்படும்

### ஒப்பந்தமும் கிழித்தெறியப்படும் - சிறிமா

நான் பதவிக்கு வந்தால் இலங்கை — இந்திய ஒப்பந்தம் கிழித்தெறியப்படும்.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் வடக்கும், கிழக்கும் சர்வஜனவாக்கெடுப்பின்றியே தமிழ் மாநிலமாக்கப்படும்,

கிழக்கில் முஸ்லிம் மக்கள் பெரும் பகுதியாக வாழும் பகுதி முஸ்லிம் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படும்.

ஐந்து கட்சிகளின் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு கூறினார்.

நேற்று பண்டத்தரிப்பில் பனிப்புலம் என்ற இடத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர்பேசினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:—

(2 ஆம் பக்கம் பார்க்க)

### வெலிக்கடையிலிருந்து

## தமிழ் அரசியல் கைதிகளை உடன்விடுவிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச.16

வெலிக்கடைச் சிறைச்சாலை உடைப்புச் சம்பவத்தினால் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகள் அச்சத்துடனும் பீதியுடனும் இருக்கிறார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி எப்போதோ விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். இன்னும் காலம் தாமதிக்காமல் சகல அரசியல் கைதிகளையும் விடுவிக்க இலங்கை, இந்திய அரசுகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு தடுத்து விடுவிக்கப்பட்டோர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைத் தலைவர் திரு. யோ. ஞானப்பிரகாசம், பத்திரிகை அறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

27 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மாவிப்பாயைச் சேர்ந்த சந்தசாமி திருவானந்தன் என்பவர் மீது கடந்த ஆகஸ்ட் மாதம் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, விடுதலை செய்யப்பட்ட போதிலும், பாதுகாப்பு அமைச்சிலிருந்து அனுமதி இடைக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி அவரை இன்னும் விடுதலை செய்ய

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

16 - 12 - 1988
மார்கழி 1
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6 22 முதல் 7 52 வரை
ராகுகாலம்:-
10 52 முதல்12 22 வரை
அட்டமி நவமி

## ஹிக்கடுவையில் நேற்று 8 பேர் சுட்டுக் கொலை!

தென்பகுதியில் ஹிக்கடுவை என்னுமிடத்தில் ஜே. வி பி, யினர் நேற்று எட்டுப் பேரைச் சுட்டுக் கொன்றனர்.

30 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று ஹிக்கடுவையில் யு.என் பி. ஆதரவாளரின் வீடு ஒன்றை முதலில் தாக்கியது.

யு.என் பி. ஆதரவாளரையும் அவரின் மனைவியையும் வெளியே இழுத்துவந்த இந்தக் கோஷ்டியினர், அவர்களின் வீட்டை எரித்தனர். அவர்களின் காரையும் எரித்தனர். பின்னர் இருவரையும் சுட்டுக் கொன்றனர்.

அதன் பின்னர் அருகில் இருந்த வேறு இரண்டு வீடுகளுக்குள் புகுந்து 6 பேரைச் சுட்டுக் கொன்றனர். பின்னர் அந்த 2 வீடுகளும் எரிக்கப்பட்டன.

கொல்லப்பட்ட எண்மரில் மூன்று தம்பதிகள் இரண்டு குழந்தைகள் அடங்குவர்.

இந்த யு.என் பி. ஆதரவாளரைச் சில காலத்துக்கு முன்னர் கொல்ல முயன்ற இரண்டு ஜே. வி பி யினரை ஊர்மக்கள் சிலர் பிடித்துகொலை செய்த சம்பவத்துக்கு பழி வாங்கும் நடவடிக்கையாக நேற்றைய சம்பவம் அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை நுவரெலியாவில் ஓர் ஆசிரியரும் ஜே வி பி. சந்தேக நபர் ஒருவரும் நேற்றுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### வெலிக்கடைச் சிறை உடைப்பு:

## தப்பமுயன்ற 21 கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்

கொழும்பு. டிச. 16

வெலிக்கடைச் சிறைச்சாலைக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட மோதல்களின் போது தப்பிச் செல்ல முயன்ற 221 கைதிகளில் 21 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தப்பியோரில் 20 பேர் கைதுசெய்யப்பட்டனர்-

பின்னர் நடத்தப்பட்ட சுற்றி வளைப்புத் தேடுதலின் போது மேலும் 150 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

-இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன (ஒ-எ)

### திருமலை அசம்பாவிதம் :

## புரிந்துணர்வு இல்லாது நடந்த ஒரு சம்பவமாம்

கொழும்பு, டிச, 16

கடந்த வாரம் திருகோணமலையில் இலங்கை -இந்தியப் படைகள் மோதிக்கொண்ட விஷயம் புரிந்துணர்வு இல்லாது நடந்த ஒரு சம்பவம்.

இந்திய அமைதிப் படைத் தளபதி லெப்டினன்ட் ஏ.எஸ். கல்கத், இலங்கை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரிடம் இப்படித் தெரிவித்தார்.

இத்தகைய சம்பவங்கள் இனி நடக்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

- இப்படி அவர் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## ஜே. வி. பி. முகாம் மீது படையினர் திடீர் தாக்கு!

கொழும்பு, டிச16

கொழும்பு நகரில் இருந்து பதினைந்து மைல் தொலைவில் உள்ளபன்னிபிட்டியவில் தீவிரவாத பயிற்சி முகாம் ஒன்றை நேற்று பாதுகாப்பு அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

நேற்றுக் காலை இந்த முகாம் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய திடீர் தாக்குதலில் நான்கு ஜே. வி. பி. சந்தேக நபர்கள் உயிரிழந்தனர். பெருமளவு ஆயுதங்களைப் படையினர் கைப்பற்றினர்.

தாக்குதலை அடுத்து பெரும் எண்ணிக்கையான தீவிரவாதசந்தேக நபர்கள் முகாமை அண்டியுள்ள காட்டுப்பகுதிக்குள் ஓடி மறைந்தனர் என்றுதெரிவிக்கப்பட்டது (உ-எ)

## கிஷிங் அணி வெற்றி!

டார்ஜிலிங், டிச. 16

மேற்கு வங்காள மாநிலத்தில் அமைக்கப்படவுள்ள டார்ஜிலிங் மலைப் பிரதேச வளர்ச்சிச் சபைக்கான தேர்தலில் சுபாஷ் கிஷிங் தலைமையிலான கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது.

42 உறுப்பினர்கள் கொண்ட இச்சபையின் 26 ஆசனங்களுக்குத் தேர்தல் கடந்த செவ்வாய் நடந்தது. வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

26 தொகுதிகளில் 24 ஐ கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணி கைப்பற்றியது.

எஞ்சிய 14 இடங்களுக்கும் மேற்கு வங்காள மாநில அரசு பிரதிநிதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், டிச 16

சுன்னாகம் மின்சார சபைக்கு அருகில் உள்ள பகுதியில் நேற்று இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் மரணமானார்.

அத்துடன் இச் சம்பவத்தின் போது இடையில் சிக்கிக்காயமடைந்த இரத்தினம் செல்வக்குமார் (வயது 22) என்ற இளைஞர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து படையினர் இப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். (உ-10)

## வெளிநாட்டு இராணுவத்தினர் இங்கிருப்பதை எதிர்க்கிறோம்

### ஒஸி அளித்த பேட்டி இது

யாழ்ப்பாணம், டிச. 16

வெளிநாட்டு இராணுவம் எமது நாட்டில் இருப்பதை நாம் எதிர்க்கிறோம். எந்த இராணுவம் - அது இந்தியா என்றாலும், ரஷ்யா என்றாலும், அமெரிக்கா என்றாலும்- நாம் அதனை எதிர்க்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இலங்கை மக்கள் கட்சி வேட்பாளர் திரு. ஒஸி அபயகுணசேகர இப்படித் தெரிவித்தார்.

நேற்று யாழ் நகரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். நவசமசமாஜக் கட்சியின் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் ஒஸ்மன் ஜெயரத்ன ஆகியோரும் மாநாட்டில் பங்குபற்றினர்.

மாநாட்டில் திரு. ஒஸி அபயகுணசேகரா கூறியதாவது;

வெளிநாட்டு இராணுவம் எமது நாட்டில் இருப்பதை நாம் எதிர்க்கிறோம்.

ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கைக்கு அமைதிப்படை என்ற அமைப்பை அழைப்பதைத் தவிர வேறு மார்க்கம் இல்லாத நிலை நாட்டுக்கு ஏற்பட்டது.

இந்த நிலை ஏற்பட்டதற்கு ஐ. தே. கட்சியும் முக்கியமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே காரணம்.

சகல கட்சிகளையும் ஒன்று கூட்டி- எமது பிரச்சினையை எமக்குள்ளேயே தீர்ப்பதற்காக- நடவடிக்கை எடுத்த போது அதில் பங்குபற்ற ஸ்ரீ. ல. சு. கட்சி மறுத்துவிட்டது.

(5ஆம் பக்கம் பார்க்க)

### ஈரோஸ் பங்குபற்றாது

யாழ்ப்பாணம். டிச. 16

இன்று யாழ் நகரில் நடைபெறவுள்ள, இலங்கை மக்கள் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் ஈரோஸ் பிரதிநிதிகள் எவரும் உரையாற்ற மாட்டார்கள்.

ஈரோஸ் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் உரையாற்றுவார்கள் என்று அக்கட்சியின் உபசெயலாளர் டாக்டர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## டிக்ஸிற்றின் உரையாடல் குறித்து குமார் கண்டனம்

கொழும்பு. டிச 16

எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் திரு. கவின்தா வல்கம்பயாவுக்கு, இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் தொலைபேசியில் கூறிய விஷயம் தொடர்பாக —

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு நேற்று முன்தினம் கண்டனக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

அக் கடிதத்தில் திரு. பொன்னம்பலம் கூறியிருப்பதாவது:

ஜனாதிபதி அவர்கட்கு,

திரு. டிக்ஸிற்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் யாழ்ப்பாண விஜயம் தொடர்பாக திரு. வல்கம்பயா தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, திரு டிக்ஸிற் அவருக்குத் தெரிவித்த கூற்று சம்பந்தமாக எனது வன்மையான

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 26 நாட்களில் கலைப்பு

புதுடில்லி, டிச, 16

பாகிஸ்தானில் 26 நாட்களுக்கு முன் நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பலுச்சிஸ்தான் சட்ட சபை நேற்று திடீரெனக் கலைக்கப்பட்டது.

பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும், இஸ்லாமிய ஜனநாயக கூட்டணியும் 9 சுயேச்சை உறுப்பினர்களை சேர்த்து பலுச்சிஸ்தானில் கூட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரசு வெளியகம், 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C/387)

## பூகொட ஜவுளிகள் மொத்த விற்பனை

பூகொட தயாரிப்புகளின் வெள்ளை பொப்ளின் கலர் பொப்ளின், பிஜாமா டிசைன் சலெஞ்சர் 19 வேளயில், சலெஞ்சர் பிரின்டெட், ஷிபோ பொலிஷ்டர், 80 x 20 மற்றும் இதர ஐட்டங்களும் மொத்த விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். "ராஜ்கோபால்ஸ்" 47, ஒரியகடை, யாழ்ப்பாணம். C/918

## 3.5K.VA மின் உற்பத்தி விற்பனைக்கு (ஜெனரேட்டர்)

3.5K VA Single Phase ஜெனரேட்டர் (Generator உடன் விற்பனைக்கு உண்டு 8 மணி தொடக்கம் 4 மணி வரை கந்தோரில் பார்வையிடலாம் Perpans Organisation பேர்பான்ஸ் ஸ்தாபனம் (மில்க்வைற் ஸ்தாபனத்திற்கு முன்னால்) 846, கே கே எஸ் வீதி, யாழ்ப்பாணம் (8135)

## கோழிக்குஞ்சு விற்பனை

நன்கு பராமரிக்கப்பட்ட 2 மாத வயதுடைய பிறவுன் பேடடுக்குஞ்சுகள், ஒருமாத வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் தொகையாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 23 கடற்கரை வீதி, நச்சிமோட்டை. (8218)

## தேவை

யாழ் மாநகர சபைக்குள் வீடு அல்லது காணி தேவை. விபரம் J P T Ltd 3. நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். (8226)

தமிழ் ஆங்கில கொம்பொஷிங் நன்கு தெரிந்த யுவதிகளும் பழக ஆர்வமுள்ளவர்களும் தேவை. றசில், பிளாஸ்ரிக் ஓவியவேலை, பழகுவதற்கு யுவதிகள், இளைஞர்கள் தேவை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் திறமைக்கேற்றபடி சம்பளம் உயர்த்திக்கொடுக்கப்படும். தரன் ஸ்ருடியோ, 9, 8, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். போன: 23858. (8222)

## தவறிவிட்டது

பிரான்ஸ் சேவியர் 52 333565 V என்ற எனது அடையாள அட்டை (9 12 88இலும் எனது மனைவியின் ரோகினி பிரான்சிஸ் சேவியர் என்ற அடையாள அட்டை 14-12-88 இலும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் 8149

மோட்டார் வாகன சன்றிதழ் 83 ஸ்ரீ 5326 என்ற புத்தம் புதியவை 7-12 1988 என்று என்னிடம் கைமாறி வந்துள்ளது. இதன் உரிமையாளர் என்னிடம் வந்து தொடர்பு கொள்ளவும். வேலக்கை ரேடன்ஸ், லோட்டன் ரோட். மருதனிப்பாய். (8141)

## இதோ சன்மானம்

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் எனது பேர்ஸ் உட்பட அடையாள அட்டையாள மற்றும் முக்கிய ரசீதுகளும் தவறிவிட்டன. எடுத்தவர்கள் உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் அ இல. 650572330 V, க. இரத்தினராஜசிங்கம் (8144

## புதிய வகுப்பு

1989ஆம் கல்வி ஆண்டிற்கான வகுப்புக்கள் ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11வரை ஆரம்பமாகியுள்ளன. ஆண்டு 3, 4, 5றகு ஆங்கிலம் கணிதம் தமிழ் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் சிறப்பான முறையில் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 5றகு புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வகுப்புக்கள் 19-12-88 திங்கள் 3.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. புதிய கல்வி நிலையம் (செங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (8227)

ஆண்டு 10, 11 -16/12 வெள்ளி பி. ப 3 மணி முதல் ஆரம்பமாகின்றது. Science Centre, Karaveddy (8220)

ஆண்டு 4 5 6 7.8 9 A/L 90 89 வகுப்புக்கள் 16 12. வெள்ளி பி ப 3 மணி முதல் ஆரம்பமாகிறது மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. (8219)

## Class

சேக், ஐசிங், ஜெனரல் குக்கரி வகுப்புகள் பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். வெளிநாடு செல்வோர்களும் இல்லத்தரசிகளும் சிறந்த ஒரு வரப்பிரசாதம் காலம் 2 மாதம். ஆரம்பமாகிவிட்டது. உடன் தொடர்பு கொள்க: Arullananda 11 2, வைமன் வீதி, நல்லூர். (C 932

## Spoken English

புதிய பிரிவு தூர இடங்களிருந்து வருபவர்கள் வசதிக்காக நேரம் பகல் 10.30 - 12.30 திங்கள்/புதன் நாட்களில் ஆரம்பம் 19-12-88 S B Iyar 12, வைமன் வீதி நல்லூர். (8147)

# நகரப் பாடசாலை மோகத்தைக் கைவிட்டு கிராமப்புறப் பாடசாலைகளை நாடுக

## பரிசளிப்பு விழாவில் கல்வி அதிகாரி உரை

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பல சிரமங்கள் மத்தியில் நகரப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். இந்த மோகத்தை மாற்றி கிராமப் பாடசாலையில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும். அப்பொழுது தான் கிராமப்புறப் பாடசாலைகள் வளர்ச்சி அடையும்

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு வித்தியாலய அதிபர் திருமதி ச. பரங்கிரிநாதன் தலைமைவகித்தார்.

திரு சோமசுந்தரம் மேலும் பேசுகையில் 'இப்பாடசாலையின் வியத்தகு வளர்ச்சி கண்டு பூரிப்படைபவர்களில் நானும் ஒருவன்.

இப்பாடசாலையிலிருந்து திரு. பஞ்சாட்சரம் இளைப்பாறியுள்ள போதிலும் அதன் வளர்ச்சிக்காக அவர் இன்றும் உழைத்து வருவது மற்றைய ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்'' என்றார்.

இப்பாடசாலையின் முன்னைநாள் அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் உரையாற்றுகையில் கூறியதாவது: இப்பாடசாலையின் ஆசிரியர்களும் அதிபரும் பிரதிஉபகாரம் இன்றி சனி, ஞாயிறு தினங்களில் கூட வகுப்புக்கள் வைத்து மாணவர்களை ஈடேற்றுவது பாராட்டத்தக்கது.

உரும்பராய் பெற்றெடுத்த முன்னாள் நீதியரசர் தி. செ. பாலசுப்பா நாகலிங்கம் இப்பாடசாலையை வளர்த்தெடுத்தவர்களில் ஒருவராவர். இப்பாடசாலையில் பவள விழா காணவிருப்பது மகிழ்ச்சிக்குரியது'' எனக்கூறினார்

வித்தியாலய அதிபர் திருமதி ச. பரங்கிரிநாதன் தனது அறிக்கையில் இப்பாடசாலைக்குப் பொதுப்பயிற்சிபெற்ற ஆசிரியர்களை நியமித்துத் தரும்படியும், கட்டடங்களை விஸ்தரித்துத்தரும்படியும் வேண்டினார்.

பிரதம கல்வி அதிகாரி திரு. கு சோமசுந்தரம் பரிசில்களை வழங்கினார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. து. இ இரத்தினவேல் நன்றியுரை வழங்கினார். (ச)

# வடக்கும் கிழக்கும்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நான் பதவிக்கு வந்தால் இலங்கை இந்திய ஒப்பந்தம் கிழித்தெறியப்படும்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எமது கொள்கைத்திட்டம் ஒன்றின் மூலம் நேர்மையான ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டிருக்கிறது

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அந்நிய நாட்டை நாம் நாடமாட்டோம்.

சம்பந்தப்பட்டவர்களுடன் நேரடியாகப் பேசி எமது தீர்வை ஏற்கச் செய்வோம்.

இனப் பிரச்சினை சம்பந்தமான எமது திட்டத்தை அனைத்து தமிழ், சிங்கள மக்களும் மற்றும் தமிழ் குழுக்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

எமது இந்தத் திட்டம் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டு பருத்தித்துறை முதல் மாத்தறை வரை விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

இது இரகசிய ஒப்பந்தம் அல்ல. இது ஒரு பகிரங்க ஒப்பந்தம். அதை நம் நாட்டு மக்கள் அனைவரது முன்னிலையிலும் வைக்கிறோம்.

உங்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் இந்தத் திட்டத்துக்கு நீங்கள் அனைவரும் ஆதரவு தாருங்கள்,

நான் பதவிக்கு வந்ததும் இந்தத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டமாக்கி பிரச்சினையைத் தீர்த்து வைப்பேன்.

ஜனாதிபதியாக வேண்டுமென்ற ஆசை எனக்கில்லை ஆனால் கடந்த பதினொரு வருடங்களாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்துவரும் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காகவே நான் ஜனாதிபதியாக வரவேண்டுமென்று விரும்புகிறேன்.

வடபகுதி மக்களின் ஆதரவுடனேயே நான் ஜனாதிபதியாவேன்.

நான் ஜனாதிபதியானதும் வடக்கு கிழக்கு மக்களுக்கு அமைதியும் பாதுகாப்பும் நிச்சயம் கிடைக்கும்

வடக்கு, கிழக்கு மக்களின் இனப்பிரச்சினை — விவசாயப்பிரச்சினை — பொருளாதாரப் பிரச்சினை ஆகியவற்றை நான் தீர்த்து வைப்பேன்.

எந்த ஓர் இனத்தையும் தாழ்த்தி பாரபட்சமாக நடத்தமாட்டேன்.

1977 ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி தவறான வாக்குறுதிகளை அளித்ததாலும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதாலும் இந்தப் பிரச்சினை இராட்சத வடிவமெடுத்தது

இதனால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஐ தே க. அரசாங்கம் இந்தியாவுடன் பேசி இந்தியாவுக்குத் தலைவணங்கி அனுபவி ஒப்பந்தம் ஒன்றைச் செய்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை தெற்கில் மாத்திரமல்லாது வடக்கிலும் மக்கள் எதிர்த்து வருகின்றனர்

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திரு ஒளி அபயசேகராவுக்கு ஆதரவு வழங்க முடிவு செய்திருப்பது குறித்து நான் ஆச்சரியமடைகிறேன்

இந்தத் தேர்தலில் வெற்றிவாகை சூடும் சந்தர்ப்பம் ஒஸிக்குக் கிடையாது

வெல்ல முடியாத ஒரு குதிரையின் மேல் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பந்தயம் கட்டியிருக்கின்றனர்

பிரதமர் திரு பிரேமதாசாவின் தேர்தல் பிரசாரப் பீரங்கி என வர்ணிக்கப்படுபவர் திரு. லலித் அத்துலத் முதலி.

ஆனால் திரு. பிரேமதாச இவ்வாரம் யாழ்ப்பாணம் வந்தபோது திரு அத்துலத் முதலி இங்கு வரவில்லை.

எந்தக் காலத்திலும் தமிழ் மக்கள் முன்னால் தான் செல்ல முடியாது என்பதை அத்துலத் முதலி அறிந்திருக்கிறார். அதனால் தான் அவர் பிரதமருடன் இங்கே வரவில்லை

எமது ஏழு வருடகால ஆட்சியில் வடபகுதி விவசாயிகள் பெரும் பயனடைந்தனர்.

இந்தப் பகுதியில் அப்போது மேற்கொள்ளப்பட்ட வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு உற்பத்திகளை நீங்கள் மறக்க முடியாது.

யாழ் விவசாயிகள் சுகமாக வாழக்கூடாது என்ற காரணத்துக்காக இந்த அரசாங்கம் இவற்றை இறக்குமதி செய்தது இதனால யாழ் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் வெளிநாடுகளுக்குச் சென்றது.

நான் பதவிக்கு வந்ததும் வடபகுதி விவசாயிகள் மேலதிக உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அவர்களுக்கு வெளிநாட்டு நாணய வருமானத்தையும் பெற்றுக் கொடுப்பேன்.

நம் யாழ்ப்பாணம் வருவதற்கு முன் நேற்று (புதன்கிழமை) திரு. குமார் பொன்னம்பலத்துக்கு ஓர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது

அவர் யாழ்ப்பாணம் போகக் கூடாது என்றே அந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. எனினும் இந்த அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது, திரு. குமார் பொன்னம்பலம் எம்முடன் துணிந்து யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் செயலாளர் திரு. மோதிலால் நேரு ஆகியோரும் திருமதி பண்டாரநாயக்காவுடன் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

(உ- ஐ 10)

## குழாயக்கிணறு பம்புகள் பழுது

ஒட்டுசுட்டான், டிச 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜெர்மன் குடியரசினால் இலவசமாக அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளின் சில பம்புகள் போதிய பராமரிப்பு இன்றி பழுதடைந்துள்ளன.

(சி 113)

## அரசாங்க அறிவித்தல்

### சனாதிபதித் தேர்தல்,

### 19 டிசம்பர் 1988

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்றும் சகல அரச சேவை அலுவலர்களின் கவனத்திற்கு. (ஆசிரியர்கள் உட்பட)

எதிர்வரும் 19-12-88ஆம் திகதி நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலிலே கடமையாற்றுவதற்கான உங்கள் நியமனக் கடிதங்கள் யாவும் உங்கள் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தயவுசெய்து உங்கள் அலுவலகங்களுக்குச் சென்று உங்கள் நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு தவறாது, அக்கடிதங்களிலே குறிப்பிட்டபடி டிசம்பர் 18ஆம், 19ஆம் திகதிகளில் உங்கள் கடமைகளுக்குச் செல்லவும்.

நியமனக் கடிதங்கள் உங்களுக்கு (ஆசிரியர்கள் உட்பட) கிடைக்காவிட்டாலும் வாக்கெடுப்பு நிலையங்களிலே சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களாகவும், கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும் கடமை புரியத் தகுதிவாய்ந்த அரச அலுவலர்கள் யாவரும் தயவுசெய்து 17 12 88 ஆம் திகதி சனிக்கிழமை மு ப 9-00 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அருகாமையில் அமைந்துள்ள வை எம். சி ஏ கட்டிடத்திற்கு வருகை தரவும்.

இத்தேர்தலிலே கடமையாற்றவிருக்கும் சிரேட்ட / கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கும், வாக்கெடுப்பு எழுதுவினைஞர்களுக்கும் அவர்களுடைய கடமைகள் பற்றி விளக்கும் அறிவுரை வகுப்புகள் இம் மாதம் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளிலே மு ப 9 30 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் புனித ஜோன் கல்லூரியிலே நடைபெறுகின்றன இவ் வகுப்புகளுக்கு தவறாது சமுகமளிக்கவும்

உங்களுக்கான போக்குவரத்துச் செலவுகள் கொடுக்கப்படும்.

சந்திரானந்த த சில்வா
14-12-1988 தேர்தல் ஆணையாளர்.
C 500)


நவ காலனித்துவ அடிமைத்துவத்தை முடிவுக்குக் கொண்டு வரும்

உண்மையான மாற்றத்திற்கான

அடக்குமுறைச் சக்திகளுக்கு எதிராக

மக்கள் சக்திக்காக

தளர்வுறாத உறுதிகொண்ட

ஒஸி

" இங்கு பிறந்த அனைவருக்கும் குடியுரிமையும், வடக்கு கிழக்கு மக்களுக்கு சுய ஆட்சியும், அங்கு வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு சமத்துவமும், எமது மண்ணிலிருந்து அந்நிய இராணுவத்தை வெளியேற்றுவதும் எனது இலட்சியம் ..."

- ஒஸி

நவ சம சமாஜக் கட்சி



மீண்டும்

யாழ்- கொழும்பு



விமான சேவை

24- 12- 88

சனிக்கிழமை தொடக்கம்

உடனடியாக

தொடர்பு கொள்ளவும்:

Mack Travels (Pvt.) Ltd. JAFFNA.

(C/508)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வெஸ்பா (L M. L Vespa)

ஸ்கூட்டர் வாங்க முன்கூட்டியே
பதிவு செய்யுங்கள்

விபரம்:
J. P, T. Ltd,
3, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

(8278)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### ✯ செல்வி க. ரம்யா ✯

மாலிசந்தி அல்வாய் தெற்கைச் சேர்ந்த கருணாகரன் சந்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வி ரம்யா தனது முதலாவது பிறந்த தினத்தை (16-12-1988) இன்று தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, பிரதீப் அண்ணா, ரூபன் அண்ணா, தாத்தா, அப்பாச்சி, லண்டன் ராஜாமாமா, புஷ்பா மாமி, பிரிந்தா, யுவனா மச்சாள்மார், கிளிநொச்சி பாலசிங்கம் பெரியப்பா, கமலா பெரியம்மா, சதீஷ், தினேஷ், உமேஷ் அண்ணாமார், ஜெகதீஷ் சித்தப்பா, சுபத்திரா சித்தி, சரம்பன் பேரானந்தம் சித்தப்பா, ரமணிமாமி, சிவகுமார் மாமா, சூரி அண்ணா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் மாலிசந்தி விநாயகர் அருளினால் நோயற்ற வாழ்வும் செல்வமும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(8182)


வாரத்தில் ஒருநாள்

# யாழ். மேலதிக பதிவாளர் கிளிநொச்சியிலும் கடமை

வட்டக்கச்சி டிச 16

கிளிநொச்சி மாவட்ட மக்கள் நலன் கருதி யாழ்ப்பாணம் கச்சேரியில் இருந்து ஒவ்வொரு புதன்கிழமையும் கிளிநொச்சிக் கச்சேரிக்கு யாழ் மாவட்ட மேலதிக பதிவாளர் வருகை தருகிறார். இதனால் இப்பகுதி மக்களின் பிரச்சினைகள் இங்கேயே தீர்க்கப்படுகின்றன.

கடந்த காலத்தில் கிளிநொச்சி மக்கள் பிறப்பு, இறப்பு பதிவு சம்பந்தமான அலுவல்களுக்கு மிகுந்த சிரமத்துடன் யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் செல்ல வேண்டியிருந்தது.

புதிய நடவடிக்கை மூலம் சட்டம் கட்டமாக பிறப்பு, இறப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் யாவும் தீர்த்து வைக்கப்படும் எனஎதிர் பார்க்கப்படுகிறது. பிறப்பு, இறப்பு பதிவு வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ஒ-ரி)

## எதிரணி வேட்பாளர் வென்றால் நிலை என்ன?

கொழும்பு, டிச 16

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றியீட்டினால் தற்போதைய அமைச்சரவையின் நிலை எப்படி இருக்கும்?

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டவர் புதிய அமைச்சரவை ஒன்றை நியமிக்க முடியுமா?

எதிரணி வேட்பாளர் வெற்றி பெறும் பட்சத்தில் இது சம்பந்தமாக அரசியல் நெருக்கடி ஏற்படும் என்று அரசமைப்புச் சட்ட நிபுணர்கள் எச்சரித்து உள்ளனர்.

அரசமைப்புச் சட்டத்தின் படி, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், கலைக்கப்படுவதற்கு முன்பு இருந்த அமைச்சரவையே புதிய நாடாளுமன்றம் கூடும்வரை பதவியில் இருக்கும்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை அவசரகால நிலைப் பிரகடனம் தொடர்பாக மட்டுமே ஜனாதிபதியினால் திருப்பிக் கூட்ட முடியும்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பு இருந்த அமைச்சரவையில் புதிய ஜனாதிபதி மாற்றங்களைச் செய்யலாமே ஒழிய புதியவர்களை அமைச்சர்களாக நியமிக்க முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ஆனால் புதிய ஜனாதிபதி அமைச்சரவையைக் கலைத்துவிட்டு முழு அமைச்சர்களின் பொறுப்புக்களையும் தானே எடுத்துக் கொள்ள முடியும்.

அல்லது அமைச்சரவையில் இருந்து சிலரை டிஸ்மிஸ் செய்யலாம்.

இப்படி அப்பேச்சாளர் சொன்னார். (எ)

## 8 மாணவிகள் சித்தி

பருத்தித்துறை, டிச 16

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரபெண்கள் கல்லூரியில் ஆறும் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் எட்டு மாணவிகள்சித்தியடைந்துள்ளனர் எனக் கல்லூரி அதிபர் திருமதி. லீலா சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சிப் பகுதியிலுள்ள பெண்கள் கல்லூரியில் முன்னணியில் இப்பாடசாலை தொடர்ந்து இடம் வகித்து வருகிறது.

(ஒ-118)

## ஜே.ஆர்.பெயரில் நூலகம்

கொழும்பு, டிச. 16

"ஜே. ஆர். ஜெயவர்த்தன வரலாற்றுச் சுவடி நூலக நிலையம்" ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு விகார மகாதேவி பூங்கா முன் தற்சமயம் சினத் தூரசம் அமைந்து உள்ள கட்டடத்தில் இந்த நூலக நிலையம் ஏற்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று அமைச்சரவைக்குத் தெரிவித்தார்.

இரண்டாவது எலிசபெத் மகாராணி பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர், சவூதி மன்னர், அமெரிக்க அதிபர் றேகன் மற்றும் பலநாடுகளின் ஜனாதிபதிகள் அன்பளிப்புச் செய்த பொருள்கள் இந்த நிலையத்தில் காட்சிக்கு வைக்கப்படும். (ஒ-எ)

புலமைப் பரிசில் பரீட்சைகளில்

## முதலாமிடங்கள் கிளிநொச்சி ம. ம. வித்தியாலயத்துக்கு

தாளையடி, டிச 16

ஐந்தா, ஆறும் ஆண்டுகளுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாமட்டத்திலே கூடுதலான புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் பெற்றுள்ளார்கள்.

ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி ம.ம.வி மாணவன் செல்வன் எஸ். வெங்கட்ராகதன் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாமிடத்தையும்.

ஆறும் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் அதே பாடசாலையைச் சேர்ந்த செல்வி. கனகேந்திரம், யாழினி கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் சித்தியடைந்த 16 மாணவர்களில் 11மாணவர்கள் கிளிநொச்சி கொத்தணி பாடசாலையைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

ஆறும் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் சித்தியடைந்த 13 மாணவர்களிலும் 18 மாணவர்கள் கிளிநொச்சி கொத்தணி பாடசாலையைச் சேர்ந்தவர்களாவார்கள்.

(ஒ-114)

## இருள் "சீசன்"

தாளையடி, டிச 16

வடமராட்சி கிழக்கில் தற்போது இருள் சீசன் ஆரம்பமாகி விட்டது.


## Y. W. C. A.

Hostel Accomodation available for students and workin girls. Classes conducted in Scientific Dress Making, Cookery Cake Icing, Beauty Culture - Hair Dressing B uquet making. Spoken English, Short hand, Type w iting and Guitar by experienced teachers. Bridal dressing Bouquet m king Cake structure, Cake icing, Sewing orders undertaken.

Inquire:

PRESIDENT,
J/ Y W C A,
99, Chapel Street,
Jaffna.

(8269)



## உடனடி வேலைவாய்ப்பு

✯ ஓமான் ✯ சவூதி

✶ 6 முகாமைத்துவ உதவியாளர் - (காரியதரிசி)
தகைமை: ஆங்கில திறமைத்துவத்துடன் தட்டெழுத்து அனுபவம்.
சம்பளம்: தங்கும்இடவசதியுடன் 12,000/-

✶ 3 கொம்பியூற்றர் ஒப்பரேற்றர்
தகைமை: கூடிய அனுபவம்.
சம்பளம்: தங்கும்இடவசதியுடன் 10,000/-

5 ஓமான் சர்வகலாசாலைக்கு ஆங்கில ஆசிரியர், ஆசிரியை, கணவன் மனைவியும் செல்லலாம்.
தகைமை: திறமையா ஆங்கிலம் 5 வருடத்திற்கு மேல் ஆசிரியர் அனுபவம்.
சம்பளம்: 18,000/- உம் தனிவீடும்.

வயதுஎல்லை:25முதல் 41 வரை

✶ மற்றும்
மேசன், தச்சன், சாரதிகள், எலெக்ரிசன் மெக்கானிக், கிளினர், லேபர், விற்பனையாளர் (பெண்)

உடன் தொடர்பு கொள்ளவும்
16 ஆம், 17 ஆம் திகதிகளில் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

கொழும்பு முகவரி:
இல.112,
ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு - 11.

அ.மகேந்திரன்
155 (5)
குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்

(8140)



+
J. M. J.

# அடுத்த இரண்டு வாரங்களுக்குள்

CANADA

# கனடா பயணம்!

ஆச்சரியம்தான்; ஆனால் இது உண்மை!

இவ்வருடத்தில்
கனடாவுக்கான எமது இறுதிக்குழு இம்மாதம் நடுப்பகுதியில் இலங்கையை விட்டுப் புறப்படவிருக்கிறது.
இக்குழு கிறிஸ்மஸ் பண்டிகையைக் கண்டிப்பாகக் கனடாவில் கொண்டாடும் எனறு
★ உறுதியுடனும் மகிழ்வுடனும் அறியத் தருகின்றோம்! ★

எனவே,
உங்கள் வாழ்வை வளம்படுத்துவதற்கான
இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முந்துங்கள்!

மேலும் விபரங்களுக்கு
உடனே
நேரில் வருகை தருமாறு ★ அன்புடன் அழைக்கின்றேன் ★

உங்கள் பயண அமைப்பாளர்: **எஸ். பி. அன்ரன்**

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

(C-489)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய நோய் மரணத்தில் யாழ்ப்பாணத்துக்கு முதலிடம்

## இருதய நோய் கருத்தரங்கில் தகவல்

யாழ்ப்பாணம், டிச 16

இருதய நோயினால் ஏற்படும் மரண வீதத்தில் யாழ்ப்பாணம் முதலிடத்தை வகிக்கிறது.

சிறு வயது தொட்டு அளவான சமபல உணவு, தேகப் பயிற்சி மூலம் இருதயத்தைப் பக்குவப்படுத்தினால் இந் நோயைத் தடுக்க முடியும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருதய நோய் பற்றிய கருத்தரங்கில் உரையாற்றும் பொழுது யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியர் மேற்கண்டவாறு கூறினார்.

சுகாதார கல்விப் போதனாசிரியர் திரு கே. வைத்தீஸ்வரன் கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார்.

டாக்டர் நச்சினார்க்கினியர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது; இன்றைய மாணவ சமுதாயம் காலையில் அவசரம் அவசரமாக ரியூசன் செல்வதும் பாடசாலை செல்வதும் மீண்டும் ரியூசன் செல்வதுமாக உள்ளனர்.

பாடசாலை விளையாட்டு மைதானங்களில் புல் வளர்ந்துள்ளன.

இந்நிலை தொடருமானால் எதிர்காலத்தில் இளைஞர்களும் இருதய நோய்க்கு ஆளாகும் அபாயம் உண்டு'' எனக் கூறினார்.

யாழ் மருத்துவக் கல்லூரி சமூக நோயியல் பீடத் தலைவர் டாக்டர் என் சிவராசா உரையாற்றுகையில் '' இருதய நோய் பெண்களை விட ஆண்களையேகூடுதலாகப் பாதிக்கின்றது.

இதில் 30–55 வயதுக்குட்பட்டோரும் A, A B இரத்தப்பிரிவைச் சேர்ந்தோரும். அதிகமாக மனக் குழப்பங்கள் கூடியோரும் இந்நோயினால் பாதிக்கப்படுவர்.

புகைத்தல், கூடிய கொழுப்புள்ள உணவருந்தல். சீனி அதிகமாக உபயோகிக்தல் உப்பு அதிகமாக உணவில் சேர்த்தல், சலரோகம், அதிகத்த அமுக்கம் சிறுநீரக நோய்கள் குடிப்பழக்கம் உள்ளோர் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்

ஆகவே உணவுப் பழக்கங்களில் மாற்றம் ஏற்படவேண்டும்.

கொழுப்புள்ள உணவு கோதுள்ள கடல் உணவுகள் – நண்டு. இறால், சணவாய் போன்ற உணவுகளைத் தவிர்த்தல், ஈரல், கிட்னி மூளை போன்றமிருக உணவுகளை அதிகம் உண்ணாதிருத்தல் மூலம் குடியிருந்து இருதய நோயைத் தவிர்க்கலாம் என விளக்கினார்.

தெல்லிப்பழை சுகாதார வைத்தியர் டாக்டர் ஆர் தெய்வேந்திரம் பேசுகையில்; '' அமெரிக்கா, பின்லாந்து ஆகிய நாடுகளில் மக்கள் அதிகமாக மாமிச உணவை உண்பதால் 45 வயதில் 25 சதவீதமானோர் ஒரு முறையாவது இருதயநோயால் தாக்கப்படுகிறார்கள்.

சைவ உணவு உண்பவர்களுக்கு அசைவ உணவு உண்பவர்களிலும் பார்க்க மிகக்குறைவாகவே இந்நோய் பீடிக்கிறது.

மீனை அதிகமாகச் சாப்பிடும் யப்பானியர் இறைச்சியை அதிகமாகச் சாப்பிடும் மேல்நாட்டவர்களிலும் பார்க்க குறைவாகவே இந்நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

வெங்காயம், உள்ளியை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவை இருதய நோயைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

இப்படி அவர் கூறினார். (ச-18)

## மின்சாரம் இன்றி கிளிநொச்சி பாதிப்பு

வட்டக்கச்சி, டிச 16

மின்சாரத் தடைகாரணமாக கிளிநொச்சி மாவட்டம் இருளில் மூழ்கியுள்ளன அரச மருத்துவமனை, அரச அலுவலகங்கள் மின் தடையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சிப் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்ட மின்சாரம் கிடைப்பதற்கு முன் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தில் இருந்து இயங்கிய ஜெனரேட்டர்கள் மூலம் போதிய மின்சாரம் வழங்கப்பட்டது

கிளிநொச்சி அரசினர் மருத்துவமனைக்கும் அரச அலுவலகங்களுக்கும் தேவையான மின்சாரத்தை பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் மூலம் வழங்கும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச – ரி)


# அரசாங்க அறிவித்தல்

## சனாதிபதித் தேர்தல் - 1988

நடைமுறையிலுள்ள வாக்காளர் பதிவேட்டிலே வாக்காளர்களாகப் பெயர் பதியப்பட்டிருக்கும் சகலரும் எதிர்வரும் 19. 12 88 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலிலே வாக்களிக்கலாம். அவர்கள் யாவரும் தமது வாக்காளர் இலக்கத்தை தத்தமது உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலோ, அல்லது கிராம சேவையாளர் அலுவலகத்திலோ சென்று குறித்துக் கொண்டு தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள புதிய வாக்கெடுப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆர். கே. சந்திரானந்த த சில்வா,
தேர்தல் ஆணையாளர்.

1988 டிசெம்பர் 14ஆம் திகதி. (C 498)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



யோசவ்நாயகம் அன்ரன் தேவராஜா
(தேவதாஸ்)

தோற்றம். 17 03-1959 மறைவு: 16-12-1986

புவியினில் மலர்ந்த நீவிர்
புன்னகை சிறக்க வாழ்ந்து
புனிதமாய் மறைந்து விட்டீர்
புகழ்ச்சியாய் நின்பெயரை
புங்கலமில் போற்றிடுவோம்!

உம்மை நினைந்து வாடும்
தாயார், அண்ணை, அணணி,
தங்கை, மைத்துனர், தம்பிமார்,
மருமகன்.

No: 87 கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (8272)



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அம்பலம் கோணலவரநாதன்

தோற்றம்:- 24- 06- 1963 மறைவு - 11- 12- 1984

அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் அன்புமொழி பேசி எங்களைக் காலமெல்லாம் கலங்கவிட்டுச் சென்றாயே? நீ எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் உன் நினைவு எம்மைவிட்டு அகலாது! உன் சிரிப்புத் தவழும் நின் முகத்தை இனி எப்போ காண்போம்?

தங்கள் நினைவால் வாடும்
அம்மா, அண்ணா அக்காமார்.
மற்றும் மச்சான்மார் மச்சாள்மார், மருமக்கள்
நண்பர்கள்.

மாதகல் மேற்கு,
மாதகல். (8281)


## இயல், இசை நாடகப்போட்டி

வேலணை, டிச 16

வேலணை கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே இயல், இசை, நாடகப் போட்டி அண்மையில் வேலணை கொத்தணி அதிபர் திரு. சு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மூன்று முதலாவது இடங்களையும் ஒரு மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டது. (சி-167)

# மக்கள் வாழ்வதற்கு அவர்கள் கற்ற கல்வியே மூலதனம்

## பரிசளிப்பு விழாவில் உரை

சுழிபுரம். டிச 16

கல்விச் செல்வம் தமிழ் மக்களின் சொத்து எமது முன்னோர்கள் கல்வியை கண் எனப் போற்றி வந்தனர். இன்று நாம் வாழ்வதற்கு நாம் கற்ற கல்வியே மூலதனமாகும் கிராமப்புறங்களில் கல்விக் கூடங்கள் செய்து வரும் சேவையை நாம் போற்றிப் பெருமையுற வேண்டும்

தாக்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியசாலை வருடாந்தப் பரிசளிப்பு விழாவில சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்

பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் திரு சு சிவவாசிகர் தலைமையில் நடைபெற்றது

திரு தா. தங்கராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு நா வேலுப்பிள்ளை ஆசியுரை வழங்கினார்,

வித்தியாலய அதிபர் திரு சு சிவாசிகர் தமது வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்துப் பேசுகையில் கூறியதாவது!

தொடர்ச்சியான நெருக்கடிச் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் கல்வித்துறையிலும் பல நெருக்கடிகளை சந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்

எந்த நேரிலும் கல்விப் பயிரை வளர்ப்பது நமது கடமையாகும்

எமது பெரியார்கள் தரும் ஆதரவு கல்வியை மேலும், மேலும் வளர்க்க வாய்ப்பாக அமைகின்றது- இப்படி அவர் கூறினார். (ச-28)

## பயிர் பாதிப்பு

நெடுந்தீவு டிச 16

நெடுந்தீவில் போதிய மழை இல்லாததால் இங்கு உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (ச-...)

## மக்கள் முகம்

### 6ஆவது முறையாக தலைவரானார்

யாழ்ப்பாணம், டிச 16

உரும்பராய் கற்பக விநாயகர் மகளிர் ஐக்கிய நாணய சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் திருமதி புவனேஸ்வரி கனகரத்தினம் ஆறுவது முறையாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உப - தலைவராக திருமதி யோகலட்சுமி இராசரத்தினமும் செயலாளராகச் செல்வி சகைலாசசுந்தரமும் பொருளாளராகத் திருமதி வ. இந்திரராசாவும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். (ச)

### 20 வருடத்துக்குமேல் திருத்தப்படாத வீதி !

சுழிபுரம், டிச 16

தொல்புரம் வழக்கம்பரை பாணவெட்டி வீதியால் பொதுமக்கள் நடந்தும், வாகனங்களிலும் செல்லமுடியாது பெரும் அவதியுறுகின்றனர்.

இருபது வருடங்களுக்குமேல் இவ்வீதி திருத்தம் செய்யப்படவில்லை. (ச-28)


## 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10. 02. 1919

மறைவு: 29. 12. 1984

திதி 16. 12. 1988



### திரு. ஆறுமுகம் நாகேந்திரம்

(வசாவிளான்)

இல்லத்தின் ஒளிவிளக்காய் துலங்கிஎம்மை எல்லாம் வழிநடத்திய எமது இதயத் தெய்வமே! நீங்கள் மறைந்து நாலாண்டு சென்றாலும், நாம் உங்கள் நினைவை மறவோம். உங்கள் ஆத்மாசாந்தியடையமானம்பிசாய்ப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புள்ள
மனைவி பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

''ராணி அகம்''
பிள்ளையார் கோயிலடி,
வசாவிளான். (8273)



## கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1989

பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்திபெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1989'' எனக் குறிப்பிடப்பட்டு 30-12-1988ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இதன் கீழ் கையொப்பம் இடப்பட்டுள்ளவருக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அதுடன் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணத்துக்கான காசோலை அல்லது காசுக்கட்டளை விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை என்ற பெயருக்கு எழுதப்பட்டு விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

| பொருட்களின் விபரம் | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|
| 1. காகிதாதிகள் | ரூ 25-00 |
| 2. சுகாதார சேவைக்கான பொருட்கள் | ரூ. 25-00 |
| 3 அச்சிட்ட படிவங்கள், பதிவேடுகள் வழங்குதல் | ரூ 25-00 |
| 4. மின்சார பொருட்கள் வழங்குதல் | ரூ. 25-00 |
| 5 1989ஆம் ஆண்டுக்கான வாகனத் தகடுகள் தயாரித்தல் | ரூ. 25-00 |
| 6 சீருடைகளுக்கான துணிகள், சப்பாத்துக்கள் வழங்குதல் | ரூ. 50-00 |
| 7 ஆயுள்வேத மருந்துகள் வழங்குதல் | ரூ 25-00 |
| 8. மராமத்துச் சேவைக்கான பொருட்கள் வழங்குதல் | ரூ 25-00 |

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. குணராசா,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C/491)



# M. Three Travel

பெருமையுடன் வழங்கும்

## உடனடி வேலைவாய்ப்புக்கள்

கீழ்க்காணும் வெற்றிடங்கள் தறபோது எம்மிடம உண்டு

**BHARIN பாறின்**

18 வயதிற்கு மேல்

(1) Carpenter - தச்சுவேலையாட்கள்
(2) Auto Diesel Petrol Mechanic - ஓட்டோ டீசல் பெற்றோல் மெக்கானிக்
(3) Auto Electricians - ஓட்டோ எலக்ரீசியன்ஸ்
(4) Mason - மேசன்

நம்பிக்கை, நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

## M THREE TRAVEL

★ புதிதாக கடவுச்சீட்டு செய்பவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்.
★★ எங்களிடம் புதுக்கடவுச்சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுச்செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்.
★★★ (Bond) பொன்ட் செய்து கொடுக்கப்படும்.

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொளள வேண்டிய முகவரி:

## த. இந்திரநாதன்

''இந்திரபவனம்''
சேதி லேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

No 1, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C-933)



## ஆறும் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி திரவியம் கந்தையா

மலர்வு: 19-3 1945 உதிர்வு: 16-12-1982

ஆண்டாறுகள் மறைந்ததம்மா! உங்கள் அன்பு உருவம் மறையவில்லை! உங்கள் நினைவு இல்லா நாளில்லை! எம்துயர் ஆறுதம்மா! எங்கள் எல்லோர் வாழ்விலும் ஒளிவிளக்காய், ஒளி ஏற்றிய அன்புத் தெய்வமே! ஆண்டுகள் ஆறல்ல நூறு ஆனாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காதம்மா!

—கணவர், பிள்ளைகள்

''நித்திலம்ஸ்''
சன்னதி ரோட்,
தம்பாலை,
அச்சுவேலி. (8138)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு

பொருள்:
அகத்தே பொருந்தாமல் புறத்தில் பொருந்தி நடப்பவரின் நட்பு, தக்க இடம் கண்டபோது எறிவதற்குரிய பட்டடையாகும்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - ஐந்நிலை
இல: 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
16-12-88 த. பெ. இல 23

# சிக்கனம் தேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான மின்சார விநியோகம் சீராகுவதற்கு — வழமை நிலைக்கு வருவதற்கு — எப்படியாவது இன்னும் மூன்று வாரங்களுக்கு மேல் செல்லும் என்று உத்தேசிக்கப்படுகிறது.

அதாவது மின்சார விடயத்தில் தை பிறந்த பின்னர்தான் வழி பிறக்கும் சாத்தியம் உண்டு; அதற்கு முன்னர் அல்ல என்பதாகும்.

ஹபறணைக்கும் அனுராதபுரத்திற்கும் இடையில் ஐந்து மின் கோபுரங்களும், ஹபறணைக்கும் மாத்தளைக்கும் இடையில் இரண்டு மின்கோபுரங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. அவற்றை முற்றாக மீள அமைத்தாலே, குடாநாட்டிற்கான மின் விநியோகத்தை வழமை நிலைக்குக் கொண்டு வரலாம்.

மின் கோபுரங்களை மீள அமைக்கும் வேலைகளை இப்போதைக்குத் தொடங்க முடியாத நிலை; நினைத்துத் தானும் பார்க்க முடியாத சங்கடம்.

நிர்ணயிக்கப்பட்டவாறு எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால், அதன் பின்னர் மக்களதும் அரச ஊழியர்களதும் பாதுகாப்பு நிலைமை சீரடைந்தால மட்டுமே, மின் கோபுரத் திருத்த வேலைகளை ஆரம்பிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் இரண்டொரு நாளில் நிலைமை எதிர்பார்ப்பதை விட வேறுவிதமாக மாறினால், மின்சார விநியோகத்தில் சீரற்ற நிலை மேலும் மாதக் கணக்காகத் தொடரும் என்பதை மறந்து விடுவதற்கு இல்லை.

இப்படியான ஒரு சூழ்நிலையிலும் மக்கள் மின்சாரத்தை வீணாகச் செலவு செய்வது பெரும் சமூக விரோதமாகும். டீசல் கொண்டு இயங்கும் இயந்திரங்கள் மூலம் பெரும்பணச் செலவில்தான் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இப்போது குடாநாட்டில மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

சுழற்சி முறையில் வழங்கப்படும் மின்சாரத்தை அவசிய தேவைக்கு மட்டும் அளவோடு பாவிக்க வேண்டும் என்று குடாநாட்டு மக்கள் உணர்வதாக இல்லை.

மின்சாரம் கிடைக்கும் நேரத்தில், தடையையும் மீறிப் பலரும் அதனை அதிகளவில் உட்கொள்ளும் இயந்திராதிகளை இயக்குகிறார்கள். வேறு பலர் சாதாரண நாட்களில் செய்வதுபோல வீடுகளை செகசோதிகள் ஆக மாற்றுகிறார்கள். இவைகளை விடவும், மின்சார டிரான்ஸ்போமர்களைப் பழுதடையச் செய்யும் நடவடிக்கைகளிலும் வேறு சில தீய சக்திகள் ஈடுபடுகின்றன.

மின்சார விநியோகம் தடைப்பட்டதால் மக்களின பல தேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது உண்மைதான். தொழிற்கூடங்கள், ஆலைகள் என்பன மூடிக்கிடப்பதால் பலர் தொழில் இழந்துள்ளதையும் மறப்பதற்கு இல்லை.

ஆனால் சகலாது கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட நிலையில மின்சாரத்தடை ஏற்பட்டிருப்பதால், கிடைக்கும் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிப்பது மிகமிக அவசியம். இல்லையேல் ஆஸ்பத்திரி போன்ற அத்தியாவசிய சேவைகள தடைப்படும் அபாயம் உண்டாகும்.

மின்சாரத்தடை ஏற்படும்போது மட்டும் அதுகுறித்துத் "தலையை உடைக்காமல்", நீர் மின்சாரத்துக்கு மாற்றீடாகச் சூரிய சக்தியையும், எரிவாயுவையும் பயன்படுத்த வகை செய்வது மிக அவசியம். அவற்றுக்கான விரிவான, பெரிய திட்டங்கள் அவசியம்.

வருடத்தில பதினொரு மாதமும் வெயில் எறிக்கும் பகுதியாக வடபிரதேசம் மாறி வருவதால் இங்கு சூரிய சக்தியைப் பயன்படுத்தும் பாரிய திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும்.

அப்போதுதான் தமிழ்ப் பகுதிகள் சக்தித் தேவைக்குத் தென்பகுதியை நம்பி இருக்கும் நிலையை மாற்றமுடியும்.

தென்பகுதியில்

# பிரச்சினைகள் நீடிப்பின் வங்கிகள் கஷ்டத்தில விழும்

தென்பகுதி பிரச்சினைகள் விரைவில தீர்ந்தால் அவ்வளவு கஷ்டம் வராது; நீடிப்பின் வங்கிகளும் பெரும் கஷ்டத்தில விழுந்துவிடும்.

வர்த்தகர்கள், வங்கியாளர்கள் கூட்டம் ஒன்றில் சிரேஷ்ட வங்கி அதிகாரி ஒருவர் இப்படித் தெரிவித்தார்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட வங்கியாளர்கள், வாடிக்கைக் கம்பெனிகள் கூட்டம் ஒன்று ஜனாதிபதியின் பணிப்பின் மீது கடந்த புதனகிழமை நடந்தது. மத்தியவங்கி கவர்னர் நெவில் கருணாதிலக தலைமை வகித்தார்.

மீண்டும் நிலைமையை அடுத்த ஜனவரி நடுப்பகுதியில கூடி ஆராய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. (ஒ-எ)

## எம். ஜி. ஆர் நினைவுத் தூபி

சென்னை டிச 15

மறைந்த முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு நினைவுத் தூபி அமைக்கும் வேலைகள் இம்மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

மெரினா கடற்கரையில் அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவுத்தூபி கட்டப்படுகிறது.

சென்ற ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி எம் ஜி ஆர் காலமானார். [எ]

பலஸ்தீனப் பிரச்சினையில் புதிய திருப்பம்:

# அமெரிக்கா அரபாத்துடன் நேரடிப்பேச்சு அடுத்தவாரம் ரூனிஸியாவில் ஆரம்பம்!

## துக்கதினம் என இஸ்ரவேல் அறிவிப்பு

வாஷிங்டன் டிச. 15

பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தப் போவதாக அமெரிக்கா நேற்று அறிவித்தது.

ரியூனிசியாவில் உள்ள தனது தூதரை நேரடிப் பேச்சுக்களை நடத்தும்படி கேட்டிருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் தெரிவித்தார்.

பலஸ்தீன விடுதலை இயக்கம் சகலவிதமான வன்முறைகளையும் கண்டிப்பதாக யசீர் அரபாத் திட்டவட்டமாக மீண்டும் அறிவித்ததைத் தொடர்ந்து, அமெரிக்காவின் போக்கில் புதிய திருப்பம் ஏற்பட்டது.

ஜெனிவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் மத்திய கிழக்கு பிரச்சினைக்கு அரபாத் மூன்று அம்ச யோசனை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அந்த யோசனை தெளிவற்றதாக இருப்பதாகக் கூறி அதன் அடிப்படையில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தமுடியாது என்று அமெரிக்கா அறிவித்தது.

அதைத் தொடர்ந்து ஜெனிவாவில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் அரபாத் மீண்டும் தனது நிலையை தெளிவாக்கினார்.

★ இஸ்ரவேல் என்ற நாட்டை ஏற்றுக் கொள்ளும் ஐநாவின் 242, 338 ஆம் இலக்க தீர்மானங்களை பூரணமாக ஏற்றுக் கொள்ளுகின்றோம்.

★ தனிப்பட்ட குழுக்களுடைய அரச ரீதியான பயங்கரவாதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

★ இஸ்ரவேலுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைபிடிப்போம்.

இம் மூன்று அம்சங்களை ஏற்றுக்கொண்டிருப்பதாக அரபாத் சொன்னார்.

அதன் பின்னரே நேரடிப் பேச்சுக்களை நடத்தப்போவதாக அமெரிக்கா அறிவித்தது.

சுதந்திர பலஸ்தீனம் என்று தன்னிச்சையாக அறிவிக்கப்பட்ட பிரகடனத்தை அமெரிக்க அரசு ஏற்றுக்கொண்டு விட்டது என்பது இதன் அர்த்தம் அல்ல — இப்படி அமைச்சர் ஷுல்ட்ஸ் சொன்னார்.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பை அரபாத் வரவேற்றிருக்கிறார்.

அடுத்த வாரம் நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

நேரடிப் பேச்சுக்களை நடத்தப்போவதாக அமெரிக்கா அறிவித்திருப்பது ஏமாற்றத்தை அளித்திருப்பதாக இஸ்ரவேல் அரசு கூறியுள்ளது.

"இன்று துக்கதினமாகும்" என்று இஸ்ரவேல் வெளியுறவு அமைச்சர் ஷிமோன் பெரெஸ் தெரிவித்தார். (எ)

# அ.தி.மு.க 'ஜா'—த.மு.மு கூட்டணியில் பிளவு இல்லை - வீரப்பன் தகவல்

சென்னை, டிச 15

'ஜானகி அ.தி.மு.க. சிவாஜி கட்சி கூட்டணியில் பிளவு எதுவும் இல்லை' என்று முன்னாள் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார்.

சிவாஜி கணேசனின் தமிழக முன்னேற்ற முன்னணி கட்சியின் கொள்கைகள் பரப்பும் வகையில் மாதமிருமுறை வெளிவரக்கூடிய பத்திரிகையின் வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

தமிழக முன்னேற்ற முன்னணியின் பொருளாளர் ராம்குமார் பத்திரிகையை வெளியிட முன்னாள் அமைச்சர் ஆர். எம் வீரப்பன் பெற்றுக் கொண்டார்.

விழாவில் அவர் பேசியதாவது:-

தமிழக முன்னேற்ற முன்னணியின் முதல் இலட்சியமாக, சமுத்தை அறுத்த கூட்டத்திற்கு பட்டம்புகட்டும் வகையில் ஜானகி எம் ஜி. ஆரை மீண்டும் அரியணையில் அமர்த்துவேன்' என்று சிவாஜி சபதம் எடுத்துள்ளார்.

சிவாஜி கட்சி, அ.தி.மு.க.வுடன் சேர்ந்துவிட்டால் அவை வலிவு பெற்றுவிடும், எனவே சேரவிடக்கூடாது என்று தடுப்பதற்கு காங்கிரஸ்காரர்களின் தரகர்கள் கூட்டம் சதி செய்து கொண்டு இருக்கிறது.

எங்களுக்குள் எந்த வித பிளவும் கிடையாது. எங்களது கூட்டணி நியாயத்தையும், சத்தியத்தையும் நிலைநிறுத்துவதற்காக அமைக்கப்பட்டது. பதவிக்காக சேர்ந்த கூட்டணி அல்ல.

'கூட்டணிக்குள் ஒப்பந்தம் ஏற்படவில்லை. தொகுதி பங்கீட்டில் தகராறு' என்று ஏதேதோ சொல்லி பிளவை ஏற்படுத்த சில சந்தர்ப்பவாத நயவஞ்சகர்களின் கனவுக் கோட்டைகள் தவிடுபொடியாகி விட்டன.

நம்பிக்கைத் துரோகிகளுக்கு பாடம் கற்பிப்பதற்காக தலைமை பூண்டு 'எனது அண்ணன் தலைமையில் இருந்த அமைச்சரவையை ஜானகி அம்மாளிடம் ஒப்படைப்பேன்' என்று சிவாஜிகணேசன் புறப்பட்டு இருக்கிறார்.

எங்களுக்குள் இடம் பிரச்சினை இல்லை. யார் யார் போட்டியிடுகிறார்கள் என்பதும் இல்லை. துரோகம் செய்த காங்கிரசை வீழ்த்துவது தான் எங்கள் லட்சியம். [எ]

## தமிழ்நாடு தேர்தல் களம்

## வேளி உலகில்

# அறிவு ஜீவிகள்—சமூக சேவையாளர் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும்

## ஈ. என். டி. எல். எப். உறுப்பினர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் டிச 16

'மாகாண சபைகள் மக்களுக்கான சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாத போதும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவது அவசியமானது. அறிவு ஜீவிகள் சமூக சேவகர்கள் எமக்கான அறிவுரைகளையும் வேலைத் திட்டங்களையும் வழங்கி ஒத்துழைப்பதின் மூலம் எம்மையும் நாம் சார்ந்துள்ள அரசியல் நிர்வாகத்தையும் நெறிப்படுத்தி மேன்மை அடையச் செய்ய முடியும்.

இவ்வாறு வவுனியா பிராந்திய ஈ. என். டி. எல். எவ். பொறுப்பாளரும் மாகாணசபை உறுப்பினருமான திரு. செந்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் என்பது முழுமையான மற்றத்துக்கு உள்ளாகிவரும் இக்கருணத்தில் தமிழீழ விடுதலைக்காகப் போராடி பல தியாகங்களைச் செய்த எமது சகோதர இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்த பலமிக்க அமைப்பாகச் செயற்படுவது மிகவும் அவசியம்.

இவ்வொன்றிணைவுக்காகச் சகல அமைப்புகளும் முன்வருவதுடன் உளசுத்தியுடன் தமிழ் மக்களுக்காகப் பாடுபட முன்வருமாறு அழைக்கிறோம்.

இவ்வொன்றிணைவிற்காக ஈ என்.டி எல்எவ் சகல வடிவங்களிலும் சகலருடனும் ஒத்துழைக்க எவ்வேளையும் தயாராக உள்ளது என்பதை உறுதி கூறுகிறோம்.

பாதுகாப்பு பொருளாதாரம் விஞ்ஞானம், கல்வி, கலை, கலாசாரம் விளையாட்டு, நிர்வாகம், விவசாயம், கடற்றொழில், மனிதவளம் என்பவற்றை மீளக் கட்டி எழுப்புவதுடன் நிர்வாக முறைகளைக் கட்டி எழுப்புவதும் தற்போதைய அத்தியாவசிய பணிகளாக உள்ளன.

தமிழ் இனத்தில் அக்கறை கொண்ட புத்திஜீவிகள் எமது அறிவுரைகளை எமது பிராந்திய அலுவலகங்கள் ஊடாகவும், பிராந்திய பொறுப்பாளர்கள் ஊடாகவும் அறிவிக்குமாறு வேண்டுகிறோம்.

இவ்வாறான சமூக சேவைகளை ஒவ்வொருவரும் இத்தருணத்தில் செய்வது அவசியமாகும்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-ச-164)

## சொர்க்கவாசல் தரிசனம்

யாழ்ப்பாணம் டிச 16

அளவெட்டி ஸ்ரீ நாகேஸ்வர ஆலயத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் ஒருமணி வரையுள்ள சுபவேளையில் சொர்க்கவாசல் தரிசனக் காட்சி இடம் பெறும்.

அத்துடன் புதிய கோபுரத் திருப்பணி ஆரம்ப நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. (ஒ)

## வாசகர் திருமுகம்

# மதகுருமாருக்கு மதிப்பு !

யாழ்ப்பாணத்தில் எப்போதேனும் ஒரு பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதனால் பலருக்குப் பல அநுபவங்கள் ஏற்படுவது உண்டு.

தற்சமயம் பெற்றோல் தட்டுப்பாடு உண்டு. எங்கள் ஊரில் உள்ள பெற்றோல் நிலையத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு பெற்றோல் வந்தது. இன்று (10-12 88) காலையில கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் அதற்கு முந்திய தினத்தில் சிலருக்கு பெற்றோல் கொடுக்கப்பட்டது. அது அவர்களுடைய செல்வாக்கைப் பொறுத்தது.

இன்று அறிவித்தல் பிரகாரம் காலை 6 30 மணிக்கு ஆச்சிரம வாகனத்தைக் கொண்டுபோன பொழுது எங்களது வாகனம் 36 வது எல்லோரையும் போல வரிசையில் நின்று பெற்றோல் 7 லீற்றர் கிடைத்ததையிட்டு பெருமையடைகிறோம்.

யாழ்ப்பாணத்தில் இந்துமதத் துறவிகள் எத்தனைபோ இருக்கிறார்கள்? இது பலருக்கு தெரிய வேண்டிய அவசியமில்லை.

யாழ்ப்பாணத்தில் எங்கள் சேவாச்சிரமத்தின் மூலம் நிவாரணம பெற்றவர்கள் சுமார் ஆயிரம் பேர்கள் இருப்பார்கள். சேவை புரியும் எங்களுக்கும் ஒரு துறவிக்கும் சமயப்பற்றுடைய மக்கள் (தமிழ் மக்கள்) கொடுக்கும் மதிப்புப் பற்றிச் சிந்திக்கும் பொழுது மனதுக்குச் சிரமமாக உள்ளது. இந்தியாவிலும், தென்னிலங்கையிலும் மக்கள் தமது மதகுருமாருக்குக் கொடுக்கும் மதிப்பை ஒரு முறை நினைத்துப் பார்க்க முடியுமா?

பருத்தித்துறை —சுவாமி சித்ருபானந்தா.

# வெளிநாட்டு.....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற விசேட அலுவலைக் கவனிப்பதற்காகவே அமைதிப்படை இங்கு வந்தது. அந்த வேலை முடிந்தவுடன் நிரந்தரமாக வெளியேற வேண்டும்.

நான் ஜனாதிபதியானவுடன் அக்கடமைகளை நிறைவேற்றி அவர்களை அனுப்பி வைப்பேன்.

### ஆதரவு

இந்தத் தேர்தலில் என்னை ஆதரிப்பதாக ஈ. பி. ஆர் எல். எவ். ஈ என். டி. எல். எவ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை தெரிவித்துள்ளன. இது தொடர்பாக ஈரோஸ் அமைப்புடனும் பேசவுள்ளோம்.

லண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. அன்ரன் பாலசிங்கத்திற்கும செய்திகளை அனுப்பினோம். ஆனால் இது தொடர்பாக அநுசப்பகத்தில் பேசிய எமது பிரதிநிதியிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.

'புளொட்' இயக்கம் என்னை ஆதரித்து விரைவில் அறிக்கை ஒன்றை விடும் என எதிர்பார்க்கிறோம்.

ஜனாதிபதி வேட்பாளர்களில எனக்குத்தான் இவ்வளவு தமிழ் குழுக்களின் ஆதரவு இருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில தீர்வு காண முடியாது அரசியல தீர்வே வழி என்று 1984 ஆம் ஆண்டு எமது கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்தே கூறிவந்திருக்கிறோம்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் உட்பட சகல தமிழ்த் தலைவர்களையும் நாம் பல முறை சந்தித்துப் பேசினோம்.

### முத்திரை குத்தினர்

இதனால் தெற்கு பகுதியில சிலர் —முதலாளித்துவ கட்சிகள் — சிங்கள மக்களின் துரோகிகள் என எம்மை முத்திரை குத்தினார்கள். எமது கூட்டங்களை குழப்பினார்கள். தென்பகுதி பத்திரிகைகள் எம்மை விமர்சித்தன. எமது தலைவர் திரு. விஜய குமாரணதுங்காவின் உயிர் பறிக்கப்பட்டது. கட்சி உறுப்பினர்களின் உயிருக்கு உலை வைக்க முயற்சி நடந்தது; நடந்து வருகிறது.

எனினும் நாங்கள் எமது நிலையை விட்டுக் கொடுக்கவில்லை. ஆனால் இன்று சிங்கள மக்கள் உண்மை நிலையை உணர்ந்து விட்டார்கள். எங்களுக்கு ஆதரவு தரத் தொடங்கியிருக்கிறார்கள்.

நான் ஜனாதிபதியானால் — தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக — 24 மணி நேரத்துக்குள் சகலதமிழ் குழுக்களையும் அழைத்து மாநாடு ஒன்று நடத்துவேன். அதன் மூலம் எல்லா அமைப்புகளுக்கும் இணக்கமான பரஸ்பரம் புரிந்துணர்வுள்ள தீர்வு ஒன்றை ஏற்படுத்துவேன்.

### புலிகள் கேட்பதில் தவறு என்ன?

தெற்கில் உள்ள மாகாண சபைகளுக்கே ஜெயவர்த்தனா ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கவில்லை. தனனுடைய மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்காத ஜெயவர்த்தனா ஆட்சி, தமிழ் மக்களுக்கு அவற்றை பகிர்ந்தளிக்குமா என்று தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்பதில் என்ன தவறு?

பெரும்பான்மையினரின் ஒத்துழைப்போடு அரசமைப்பை மாற்றுவதன் மூலம் தற்போது மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கூட பறித்து விட முடியும்.

நான் ஜனாதிபதியானால் வடக்கு, கிழக்கு மக்களின் அனுமதியின்றி அதிகாரங்களைப் பறிக்க முடியாதவாறு அரசமைப்பு உறுதலை ஏற்படுத்துவேன். ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்துவேன்.

வெளிமாகாணங்களில் இருந்து திட்டமிட்டு நிர்ப்பந்தமாக —திட்டமிட்டு— குடியேற்றப்படுவதை நாம் எதிர்க்கிறோம்.

தரப்படுத்தல் முறையையும் நாம் எதிர்க்கிறோம்.

தமிழ்க் கைதிகளுடன் ஒன்றரை வருடகாலம் சிறையில் இருந்தவன் நான். விடுதலைப் புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் உட்பட சகல தமிழ்க் குழுக்களின் தலைவர்களையும் தனித்தனியே சந்தித்து உரையாடி பரிச்சயமானவன் நான் ஆகையால் தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வை உடனடியாக ஏற்படுத்துவது எனக்குக் கஷ்டமான காரியம் அல்ல— இப்படி திரு. ஒஸி அபயகுணசேகரா தெரிவித்தார். (அ-உ-ஒ)

## மன்னிப்புச்சபை கடிதம்

அரச ராணுவம் அரசியல் கைதிகளைச் சித்திரவதை செய்வதைத் தடுத்து நிறுத்தும்படி சர்வதேச மன்னிப்புச் சபை ஜனாதிபதி கொரஸோன் அக்கினோவுக்குக் கடிதம் எழுதியுள்ளது. (எ)

## 'பீகிங் ரிவியூ' தடைநீக்கம்

சீன அரசின் வெளியீடான 'பீகிங் ரிவியூ' சஞ்சிகைக்கு விதித்திருந்த தடையை இந்திய அரசு நீக்கிவிட்டது.

இச்சஞ்சிகைக்கு 1-1-1962 இல் புதுடில்லி அரசு தடை விதித்தது.

கடந்த 26 ஆண்டுகளாக இருந்த தடை நீக்கப்படுவதற்குரிய காரணம், இரு நாடுகளுக்குமிடையே உறவு சீராகி வருவதும் பிரதமர் காந்தி இம்மாதம் 19 ஆம் திகதி சீனா விஜயம் செய்ய இருப்பதுமே. (எ)

## விமானப்படை தளம்

தஞ்சாவூரில் 1,800 ஏக்கரில் 40 கோடி ரூபா செலவில் விமானப்படைத்தளம் ஒன்று அமைக்கப்படும்.

இன்னும் நான்கு ஆண்டுகளில் இந்த விமானத் தளம் இயங்க ஆரம்பிக்கும்.

தளநிர்மாண வேலைகள் எதிர்வரும் செப்டம்பரில் ஆரம்பமாகும் என்று தென்இந்திய விமானப்படைப் பிரிவுத் தளபதி எயர் மார்ஷல் சென் தெரிவித்தார்.

மதுரையில் இன்னும் நான்கு ஆண்டுகளில் விமானப்படைப் பயிற்சி நிலையம் ஒன்று இயங்க ஆரம்பிக்கும். (ஒ-எ)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிச 16

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வருடந்தோறும் நடைபெறும் திருவாசக முற்றோதல் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் திருவாசக முற்றோதல் பிற்பகல் 4 மணி வரை நிகழும்.

## ஹாட்லிக் கல்லூரி மாணவன் முதலிடம்

பருத்தித்துறை, டிச 16

1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற ஆண்டு 6க்கான புலமைப் பரீட்சையில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவன் செல்வன் வெல்லி தேவராஜா 186 புள்ளிகளைப் பெற்று வடமராட்சியில் முதலாவது இடத்தையும், அகில இலங்கை ரீதியில் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளார். (இ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

16 - 12 - 1988 வெள்ளிக்கிழமை


## உழுந்து மா

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய சுத்தமாகவும் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டும் விற்பனையாகிறது.

தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேஷ சழிவு உண்டு

**அண்ணா கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம்.


88 ஆம் ஆண்டு பயிற்சிக்குத் தெரிவான

## தாதியர் பெயர்ப்பட்டியல் இன்னும் வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம், டிச 16
1988ஆம் ஆண்டு தாதிகள் பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல்கள் இதுவரை யாழ் தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

யாழ் சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

87 ஆம் 88 ஆம் ஆண்டுகளில் தாதிகள் பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் நேற்று ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் 88 ஆம் ஆண்டிற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு நேற்று வரை அனுப்பப்படடிருக்கவில்லை

இதனால் 87 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு பயிற்சி நடைபெறுதவர்களே நேற்றைய தினம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர்.

## இன்று சிந்தனை அரங்கு

யாழ்ப்பாணம், டிச 16
யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ''சிந்தனை அரங்கு'' என்ற நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் ''இன்றைய நோக்கில் திருக்குறள்'' என்னும்பொருள் பற்றி தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் கருத்துரை வழங்குவார். (ஒ)

### ஈரோஸ். ...
(1ம் பக்கத் தொடர்ச்சி)
ரஜித செனிவிரத்ன தெரிவித்திருப்பதாக நேற்றைய உதயனில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது.
-இப்படி ஈரோஸ் இயக்கம் தெரிவித்திருக்கிறது. (உ)

## கிளிநொச்சியில் உரத்துக்கு தட்டுப்பாடு

வட்டக்கச்சி டிச 16
கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது உரத்துக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இம் மாவட்டத்தில் இம்முறை அதிக அளவில் காலபோக நெற் செய்கைசெய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி-ரி)

## நாளையும் மறுநாளும் நிவாரணம்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 2,272 குடும்பங்களுக்கு நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம்ஞாயிற்றுக்கிழமையும் நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கொடுப்பனவுகள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியில் வழங்கப்படும்.

நிவாரணம் பெற இருப்போரின் கிராம சேவையாளர் பிரிவுகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:

சனிக்கிழமை
- ★ அச்சுவேலி வடக்கு 193
- ★ அச்சுவேலி தெற்கு 101
- ★ [illegible] 17
- ★ [illegible] 72
- ★ [illegible]
- ★ உரும்பராய் கிழக்கு 223
- ★ உரும்பராய் மேற்கு 59
- ★ கோப்பாய் வடக்கு 126
- ★ கோப்பாய் தெற்கு 131
- ★ இருபாலை 61

ஞாயிற்றுக்கிழமை
- ★ பத்தமேனி 305
- ★ இடைக்காடு 328
- ★ [illegible]த்தூர்கிழக்கு 394

## மூன்றாவது போட்டியிலும் இந்திய அணி வெற்றி!

இந்தூர், டிச. 16
மூன்றாவது ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியிலும் இந்திய அணி நியூஸிலாந்து அணியைத் தோற்கடித்தது.

இதன் மூலம் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்த ஆட்டத் தொடரில் தனது வெற்றியை இந்திய அணி உறுதிப் படுத்திக் கொண்டது.

நேற்று இந்தூரில் நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 6 விக்கெட் இழப்புக்கு 222 ஓட்டங்களை எடுத்தது. நியூஸிலாந்து அணியினால் 45 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது

தமிழக வீரரான கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் அபாரமாகப் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதே ஆட்டத் தொடரின் முதல் ஆட்டத்திலும் அவர் ஐந்து நியூஸிலாந்து விக்கெட்டுக்களை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. (உ)

### தமிழ்....
(1ம் பக்கத் தொடர்ச்சி)
வில்லை.

தண்டிக்கப்பட்ட கைதிகளை ஒப்பந்தத்தின் கீழ் விடுதலை செய்வதாக அவர்கள் அண்மையில் நடத்திய உண்ணாவிரதத்தின்போது வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் அவர்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதில் இப்படி பாராமுகமாகவும், முரண்பாடாகவும் நடந்துகொள்வது மனவேதனைக்குரியதாகும்.

எமது சகோதர தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாதிப்பு இல்லை**

இதே வேளை சிறை உடைப்பு இடம்பெற்ற தினம் அன்று மகசின் சிறையில் 152 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர் என்றும்—

வெலிக்கடை சிறை உடைப்பு காரணமாக அங்கு காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகின்றது. (அ-எ)

### டிக்ஸிற்றினா உரை-----

கண்டனத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அத் தொலைபேசி உரையாடலின் போது திரு. டிக்ஸிற் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

''பொன்னம்பலம் என்ற பெயரில் ஓர் அரசியல்வாதி இருக்கிறார்.

''இந்திய அமைதிப் படை பற்றிய அவரின் அபிப்பிராயம் தெரிந்ததே.

''யாழ்ப்பாணத்துக்கு திரு. பொன்னம்பலத்துடன் திருமதி பண்டார நாயக்கா செல்வாரானால், திருமதி பண்டார நாயக்காவுக்கு இந்திய அமைதிப்படை பாதுகாப்பு வழங்கமாட்டாது'' — என்று கூறியுள்ளார்.

'நீங்கள் சொல்வதை திருமதி பண்டாரநாயக்காவிடம் தெரிவிக்கலாமா?'' —இப்படி திரு. வல்கம்பயா திரு டிக்ஸிற்றிடம் கேட்டிருக்கிறார்.

அதற்கு திரு. டிக்ஸிற் ''இந்த உரையாடலைத் திருமதி பண்டாரநாயக்காவிடம் நீங்கள் தெரிவிக்கலாம்'' — என்று திரு. வல்சம்பயாவிடம் கூறியிருக்கிறார்.

இந்த உரையாடலைத் திரு வல்கம்பயா திருமதி பண்டாரநாயக்காவிடமும் என்னிடமும் தெரிவித்தார்.

இந்த உரையாடலை 'எக்ஸ்டென்ஷன்' மூலம் திரு. அனுரா பண்டாரநாயக்கா கேட்டிருக்கிறார். ஆகவே இந்த உரையாடலுக்கு அவர் ஒரு சாட்சி ஆவார். இதனை திரு அனுராவே இன்று காலை உங்களுக்குச் சொன்னார்.

உங்கள் வேண்டுகோளுக்கு இணங்க அனைத்தையும் எழுத்தில் சமர்ப்பிக்கிறேன்.

இந்தப் பயமுறுத்தலை நான் புரியமுடியாத நிலையில் இருக்கிறேன்.

நான் யாழ்ப்பாணத்துக்கு நாளை திருமதி பண்டார நாயக்காவுடன் சேர்ந்து செல்வதன் மூலம் ஜனாதிபதி வேட்பாளரின் பாதுகாப்பு, பத்திரம் ஆகியவற்றை விட்டுக்கொடுக்க நான் விரும்பவில்லை.

அதே நேரத்தில் நான் தனித்து யாழ்ப்பாணம் செல்வதானால் என் நிலைமைஎப்படிஇருக்கும்?

இதன் கருத்து நான் யாழ்ப்பாணத்தில் உள்ள எனது வீட்டுக்கு போக முடியாது என்பதா?

இதன் கருத்து நான் என் மனச்சாட்சி சொல்கிறபடி நடக்க முடியாது என்பதா?

இதன் கருத்து நான் இந்தியாவின் போக்கை பின்பற்றவேண்டும். அல்லது அதனைக் சழுத்தில் மாட்டிக்கொள்ள வேண்டும் என்பதா?

சமாதானம், சகஜநிலை, ஜனநாயகம் ஆகியவற்றை உறுதிப்படுத்தவே வடக்கு, கிழக்குக்கு நீங்கள் இந்திய அமைதிப்படையைக் கொண்டுவந்தீர்கள்.

இதுதான் இந்திய நிலைப்பாடு என்றால் சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்கும் என்ன வந்துவிட்டது?

வடக்கு, கிழக்குப் பகுதிகளின்மீது உள்ள உங்கள் அதிகாரத்தை நீங்கள் கைவிட்டுவிடவில்லை என்று நம்பியே இக்கேள்விகளை உங்களிடம் எழுப்புகின்றேன்.

இது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகையால் இக்கடிதத்தில் உள்ள விஷயங்களை தேசிய சர்வதேச தகவல் தொடர்பு சாதனங்களுக்கு வெளியிடுகின்றேன்,

உங்கள் உண்மையுள்ள
ஜி. ஜி. பொன்னம்பலம்
(ஜூனியர்)

### தேர்தலை....

நாயக்காவுக்கு நெருங்கியவர்கள் தான் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று கோருகின்றனர்.

அரசமைப்புச் சட்டத்துக்கு முரணாக தேர்தலை ஒத்திவைப்பதை நான் வன்மையாக எதிர்க்கின்றேன். இதுவரை 700 யு. என். பி ஆதரவாளர் கொல்லப்பட்டு விட்டனர். இதனால் பாதிக்கப்பட்டது யு. என். பிதான். ஆகவே நாம் தான் தேர்தலை ஒத்திவைக்கக் கோரவேண்டும். ஆனால் நாம் அப்படிக்கோரவில்லையே.

நான் தேர்தலை சந்திக்கத்தயார். — என்றார்.

## ரஷ்யாவில்

பூமியதிர்ச்சிக்குள்ளான ஆர்மேனியா மாநிலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உடைமைகளைக் கொள்ளையடிப்பதில் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது (எ)

### கிஷிங் ...
களை நியமிக்கும்.

முன்னணித் தலைவர் சுபாஷ் கிஷிங் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். (உ-எ)

### 26 நாட்களில்....
(1ம் பக்கத் தொடர்ச்சி)
ரசு ஒன்றை அமைத்திருந்தன.

44 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் இஸ்லாமிய ஜனநாயக அணி 10 உறுப்பினர்களையும், பாகிஸ்தான் மக்கள் கட்சி 4 உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. (உ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. இராமப்பிள்ளை தியாகராசா

காரைநகர் பத்தர்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமப்பிள்ளை தங்கமுத்துவின் அன்பு மகனும், இளைப்பாறிய தலைமை ஆசிரியருமான தியாகராசா காலமானார். இவர் வள்ளிஅம்மையின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி பரமசிவம் (நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி), பராசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயக சிவம்பிள்ளையின் அன்பு மாமனாரும், சண்முகராசன், சிவகௌரி, தெய்வநாயகியின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் 15- 12- 1988 வியாழக்கிழமை நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
ரி. பரமசிவம்

(8145)

### திரு. வை. பாலசிங்கம்
(கொக்குவில் புதுக்கோயில்)

13-12-88இல் காலமாகிய திரு வைத்திலிங்கம் பாலசிங்கத்தின் இறுதிக் கிரியைகள் இன்று 16-12-88 காலை 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
இந்திராணி (மனைவி)

73, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (8301)

### இராமலிங்கம் திருநாவுக்கரசு

சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு இராமலிங்கம் திருநாவுக்கரசு அவர்கள் (இளைப்பாறிய பிரதம கல்வி ஆலோசகர்) (15-12 88) வியாழக்கிழமை காலமானார்.

இவர் அமிர்தவல்லியின் அன்புக் கணவரும் கணேஸ்வரன், (பேராசிரியர் யாழ். மருத்துவபீடம்) சுரேஸ்வரன், (பொறியியலாளர், சிங்கப்பூர்) யோகேஸ்வரன், (Dip. in Eng.), வாகீஸ்வரன், (வைத்தியர்) திலகவதி, (வைத்தியர், Papua Nugenea) அரவிந்ததேவி (ஆசிரியை, Nigeria) தேவகி (ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி) வாசுகி ஜானகி (பல்வைத்தியம், பேராதனை) ஆகியோரின் அருமைத் தந்தையும் சுபேந்திரநாதன், (Accountant, Papua Nugenea) ஜனநாயகம், (ஆசிரியர், Nigeria) மனோகரன், (பொறியியலாளர்) ராஜலக்ஷ்மி, (வைத்தியர், (Malasia) பவானி (வைத்தியர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-12 88 வெள்ளிக்கிழமை நண்பகல் அவரது இல்லத்தில் நடைபெறும்.

122, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
தி. வாகீஸ்வரன்
(மகன்)

[8302]


## மாபெரும் பொதுக் கூட்டம்

**காலம்: 16-12-1988 காலை 9-00 மணி**
**இடம்: யாழ். மத்திய கல்லூரி மைதானம்**

ஒலி ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் காலஞ்சென்ற தலைவர் விஜய குமாரணதுங்க தமிழ்பேசும் மக்களுக்கு விட்டுச் சென்ற செய்தியை வழங்குவார்

சோசலிச இலங்கையில்

**சமாதானம், இன ஐக்கியம், சமத்துவம்**

உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்காக போராடி வந்துள்ள அனைத்து அரசியல் மற்றும் விடுதலை அமைப்புகளையும் இக்கூட்டத்தில் பங்குபற்றி உரையாற்றும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.

பேச்சாளர்கள்:-

தோழர் ஒஸி அபேகுணசேகர (ஸ்ரீலங்கா மக்கள் கட்சி) ஜனாதிபதி வேட்பாளர்
தோழர் வாசுதேவ நாணயக்கார (நவ சம சமாஜக் கட்சி)
தோழர் பேராசிரியர் ரூஸ்மன்ட்ஜயரத்ன (லங்கா சம சமாஜக்கட்சி)
தோழர் கலாநிதி ருதிக் சேனாரத்தின (ஸ்ரீலங்கா மக்கள் கட்சி)
தோழர் குணசேனமகாநாம (ஐக்கிய சோசலிஸ அமைப்பு)

அனைவரையும் திரண்டு வருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அமைப்பாளர்கள்:
ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அமைப்புக் குழு
(வடபகுதிக் கிளை]

யாழ்ப்பாணம்.
15-12-1988 (C/504)



*Your Friends In Finance -*

**SHABRA**

SU

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22073 — 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4
தொலைபேசி : 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 16 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna, on Friday 16th December 1988